ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு

செங்கல்பட்டு மாவட்டம்

அறிவிக்கை (Notification)

**அரசுத்தலைப்பு ஈப்பு ஓட்டுநர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் அறிவிக்கை**

ந.க.எண்.1634/2021/பஅ4 நாள். 14.02.2023.

செங்கல்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் அரசுத்தலைப்பில் காலியாக உள்ள 4 ஈப்பு ஓட்டுநர்கள் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

காலிப்பணியிடங்கள் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | ஈப்பு ஓட்டுநர் |
| 2. | சம்பள ஏற்ற முறை | அடிப்படை ஊதியம் -,ரூ.19500/-<br>நிலை-8 (ரூ19,500-62000/-) |
| 3. | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 4 |
| 4. | இன சுழற்சி | |
| | பொதுப்போட்டி<br>(General Turn) | 1 |
| | ஆதிதிராவிடர்(அருந்ததியர்) (பெண்) (ஆதரவற்ற விதவை)<br>(Scheduled Castes (Arunthathiyars on preferential Basis) (Women) (Destitute Widow) | 1 |
| | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்<br>(Most Backward Classes and Denotified Communities) | 1 |
| | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம் அல்லாத பிற)<br>(Backward Classes (Other than Backward class (Muslims)) | 1 |
| 5. | கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள் | |
| | 1.) ஈப்பு ஓட்டுநர் பணிக்கு 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | |
| | 2) .மோட்டார் வாகனச் சட்டம் 1988 (மத்திய சட்டம் 59/1988)-ன் படி தமிழக அரசின் தகுந்த அதிகாரியால் வழங்கப்பட்ட தகுதியான ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும் . | |
| | 3) 5 ஆண்டுகளுக்கு குறைவில்லாமல் மோட்டார் வாகனங்களை ஓட்டியமைக்கான நடைமுறை அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும் | |

| 6. | வயதுவரம்பு 01.07.2022-ந் தேதியில் | | |
|---|---|---|---|
| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | அதிகபட்ச வயது வரம்பு ** |
| 1 | பொது பிரிவினர் | 18 | 32 |
| 2 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 18 | 34 |
| 3 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | 18 | 34 |
| 4 | மிகவும் பிற்படுத்தப்ட்டோர் மற்றும் சீர்மரபினர் | 18 | 34 |
| 5 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் | 18 | 42 |

**மேற்கண்ட அதிகபட்ச வயது வரம்பு பூர்த்தியடைந்தவராக இருக்கக்கூடாது

| 7. | விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | 16.02.2023 முதல்<br>08.03.2023 வரை<br>(அலுவலக வேலை நாட்களில்<br>காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை ) |
|---|---|---|

## நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர்கள் கல்வித் தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்

2.)இனசுழற்சி,வயது வரம்பு மற்றும் கல்வித்தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

3)அரசு விதிகளின் படி மேற்குறிப்பிட்ட இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்

4.)சுய முகவரியுடன் கூடிய ரூ.30/- அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட அஞ்சல் உறை-1 (10*4 Inches Postal Cover) இணைத்து அனுப்பப்பட வேண்டும்/

5.)தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு அரசாணை(நிலை)எண் 303 நிதி (ஊதியக்குழு) துறை நாள் 11.10.2017, அரசாணை(நிலை)எண் 305 நிதி (ஊதியக்குழு) துறை நாள் 13.10.2017 மற்றும் அரசாணை(நிலை)எண்.306 நிதி (ஊதியக்குழு) துறை நாள் 13.10.2017 ன் படி ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட படிகள் வழங்கப்படும்.

6) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 08.03.2023 மாலை 5.45 மணிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்ப வேண்டும்.

| |
|---|
| **மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி)**<br>**நூலக கட்டிடம் 2வது தளம்**<br>**மருத்துவக் கல்லூரி வளாகம்**<br>**செங்கல்பட்டு -603 001** |

7) விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாளான 08.03.2023 மாலை 5.45 மணிக்குப் பிறகு காலதாமதாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8) எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

9) தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம்(Call Letter)பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

ஈப்பு ஓட்டுநர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) அலுவலகத்திலும் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட **www.chengalpattu.nic.in** என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பத்தினை மேற்படி இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(வளர்ச்சி)
செங்கல்பட்டு.

14/02/2023